**29.02.2024**

**அ.வ.எண். 123/2018**

**<u>பி.சா.1 பத்மநாபன் அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சர்வே எண் 126 என்றால் சரிதான். அந்த சர்வே எண் சாலை புறம்போக்கு என்றால் சரிதான். சர்வே எண் 126 ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கருக்கு குறைவாக தான் இருக்கும். எவ்வளவு செண்டுக்கு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 126 ல் 40 செண்ட் நிலத்திற்கு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

2. வாதி இந்த வழக்கில் கூறியுள்ள தாவா சொத்தின் ஜக்குபந்தி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் தெற்கு பக்கம் சர்வே எண் 126 ன் மிகுதி நிலம் என்றால் சரிதான். மேற்படி மிகுதி நிலத்தில் தான் நான் கூறிய 3 கோயில்கள் உள்ளது என்றால் சரிதான். அது கன்னியம்மன் கோயில், அய்யனார் கோயில் மற்றும் கங்கையம்மன் கோயில். மேற்படி 3 கோயில்களும் கட்டிடங்களால் ஆனது அல்ல என்றாலும் அதில் சிலைகள் எதுவும் இல்லை என்றாலும் சரிதான், வெறும் கல்லை வைத்து தான்

வணங்கி வருகிறோம். நான் கூறிய மேற்படி கல்லில் கடவுளின் உருவங்கள் எதுவும் பொறிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

3. தாவா சொத்திற்கும் எனது வீட்டிற்கும் இடையே சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். மற்ற பிரதிவாதிகளின் வீடுகளும் தாவா சொத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகே எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் சொந்தமான பட்டா நிலம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் வாதியின் பட்டா நிலம் உள்ளது என்றால் சரிதான். அது வாதியின் பூர்வீக சொத்து என்றால் சரிதான்.

4. வாதி தனக்கு சொந்தமான பட்டா நிலத்துடன் சேர்த்து தாவா சொத்திலும் பயிர் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் அவரது நிலத்தில் தான் பயிர் வைத்தார், புறம்போக்கு நிலத்தில் அவர் பயிர் எதுவும் வைக்கவில்லை. வாதியின் தாவா சொத்து அனுபவம் குறித்து வட்டாச்சியர் பிறப்பித்த உத்தரவு குறித்து எனக்கு தெரியாது ( இந்த கேள்வி கேட்க இயலாது என்று பிரதிவாதி வழக்கறிஞர் ஆட்சேபணை

தெரிவிக்கிறார்). தாவா சொத்தில் உள்ள பனைமரங்களை ஏலம் விடுவது குறித்து வாதி ஆட்சேபணை தெரிவித்து அதன் அடிப்படையில் தாவா சொத்தில் உள்ள பனைமரங்கள் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்று வட்டாச்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றால் எனக்கு தெரியாது.

5. சர்வே எண் 126 ல் வாதியின் தகப்பனார் சுப்பாரெட்டியார் அனுபவித்து அதற்கு 1984ம் வருடம் தண்ட தீர்வை செலுத்தியது தான் வா.சா.ஆ.9 என்றால் அதில் அவ்வாறு தான் உள்ளது, கோயில் நிலங்களை வாதி அனுபவிக்கவில்லை நாங்கள் தான் வழிபட்டு வருகிறோம். வாதியும் அவரது முன்னோர்களும் தலைமுறை தலைமுறையாக தாவா சொத்தினை அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் தற்போது வழக்கிற்காக வாதி தாவா சொத்தினை அனுபவிக்கவில்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, நாங்கள் தான் தலைமுறை தலைமுறையாக அந்த கோயில்களில் வழிபட்டு வருகிறோம்.

6. ஏன் தற்போது வரை மேற்படி கோயிலில் உருவ சிலை வைத்து கோவில் கட்டவில்லை என்றால் நாங்கள் உருவ சிலை வைத்து கோவில்

கட்டும்போதுதான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார். தாவா சொத்தினை தவிர்த்து மீதம் உள்ள சாலை புறம்போக்கு நிலத்தில் ஏற்கனவே கிராமத்தார்கள் வழிபட்டு வந்த நிலத்தில் கோவில் கட்டுவதில் வாதிக்கு ஆட்சேபணை இல்லை என்றாலும் வாதி தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வந்த தாவா சொத்தில் கோவில் கட்ட முயற்சி செய்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்தினை நாங்கள் அபகரிக்க முயற்சி செய்கிறோம் என்று வாதி 2018ம் வருடம் மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான், காவல் ஆய்வாளர் தாவா சொத்தினை பார்வையிட்டு கோவில் நிலத்தில் கோவில் கட்டுங்கள் என்று கூறினார். வாதியின் புகார் மீது காவல்துறையினர் சரிவர விசாரணை செய்து நடவடிக்கை எடுக்காததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி கம்பி வேலி போட்டிருந்தார் என்றால் இல்லை.

8. வாதிதான் தாவா சொத்தினை இன்றைய தேதிவரை அனுபவித்து வருகிறார் என்றாலும் தாவா சொத்தினை அபகரித்து கோவில் கட்ட நாங்கள் முயற்சி செய்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றாலும் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.